Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# விஜயநகர நாயக்கர் கால ஆடற்சிற்பங்கள்

**கலாநிதி.துஷ்யந்தி ஜூலியன் ஜெயப்பிரகாஷ்**
**சிரேஷ்ட விரிவுரையாளர் (நடனத்துறை)**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**மின்னஞ்சல் julithushy@gmail.com**

31

**ஆய்வுச் சுருக்கம்**

கலை உலகப் பொதுவானது. அவை எங்கும் வியாபித்துள்ளது. கலை மகிழ்ச்சிக்கும் அறிவை மேம்படுத்துவதற்கும் உதவுகின்ற ஓர் சாதனமாகும். கலையில் மனித முயற்சி முக்கியமாகின்றது. மனிதன் இல்லையானால் இயற்கை ஓர் உயர்ந்த சடப்பொருள் ஆகிவிடும். மனிதன் தனது புலன் உணர்வுகளால் தன்னைச் சூழவுள்ள புற உணர்வை அறிகின்றான். நடைமுறையில் பல அனுபவங்களைப் பெறுகின்றான். இவற்றை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்துகையில் அங்கு கலை உருவாகின்றது. தொன்றுதொட்டு வளர்ந்து வருகின்ற ஆடற்கலையானது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து தற்காலம் வரை வளர்ச்சியுற்று வருவதற்கு சங்ககாலம் தொடக்கம் விஜயநகர காலங்களில் காணப்பட்ட ஆடற்சிற்பங்களும் ஒரு சான்றாக அமைகின்றன. அந்த வகையில் 'விஜயநகர நாயக்கர் கால ஆடற்சிற்பங்கள்' என்ற தலைப்பினூடாக ஆடற்கலை வளர்ச்சிக்கு விஜயநகர நாயக்கர் கால சிற்பங்கள் சாண்று பகரும் விடயங்களையும் கருத்துக்களையும் நுட்பங்களையும் ஆராய்ந்து அவற்றை எடுத்துக் கூறுவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள் - ஆடற்சிற்பம், ஊடகம், இரஸாநுபவம், மரபு**

**முன்னுரை**

மனிதன் இயற்கையிலிருந்தும் சூழலில் இருந்தும் தான் பெற்ற அனுபவத்தை தனக்கு கைவந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்துவதே கலைகள் ஆகும். கலை உலகப் பொதுவானது. அவை எங்கும் வியாபித்துள்ளது. கலை மகிழ்ச்சிக்கும் அறிவை மேம்மடுத்துவதற்கும் உதவுகின்ற ஓர் சாதனமாகும். கலையில் மனித முயற்சி முக்கியமாகின்றது. மனிதன் இல்லையானால் இயற்கை ஓர் உயர்ந்த சடப்பொருள் ஆகிவிடும். மனிதன் தனது புலன் உணர்வுகளால் தன்னைச் சூழவுள்ள புற உணர்வை அறிகின்றான். நடைமுறையில் பல அனுபவங்களைப் பெறுகின்றான். இவற்றை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்துகையில் அங்கு கலை உருவாகின்றது.1

தொன்றுதொட்டு வளர்ந்து வருகின்ற ஆடற்கலையானது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து தற்காலம் வரை வளர்ச்சியுற்று வருவதற்கு சங்ககாலம் தொடக்கம் விஜயநகர காலங்களில் காணப்பட்ட ஆடற்சிற்பங்களும் ஒரு சான்றாக அமைகின்றன. அந்த வகையில் 'விஜயநகர நாயக்கர் கால ஆடற்சிற்பங்கள்' என்ற தலைப்பினூடாக ஆடற்கலை வளர்ச்சிக்கு விஜயநகர நாயக்கர் கால சிற்பங்கள் சாண்று பகரும் விடயங்களையும் கருத்துக்களையும் நுட்பங்களையும் ஆராய்ந்து அவற்றை எடுத்துக் கூறுவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**கலை**

சங்க இலக்கியங்களில் கலை என்னும் சொல் யுசுவு என்னும் பொருளில் குறிக்கப்படவில்லை மாறாக விலங்குகளைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கலை என்னும் சொல் மானைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது. கலைகள் 64 என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. காப்பியங்களில் கலைகள் பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றன. நாகரிகம் பண்பாடு என்பவைகள் கலைகளின் வாயிலாகப் பிறந்தவை. இன்றைய மனித வளர்ச்சியில் கலைகள் மரபுக்கு உட்படாது உள்ளன. நாகரிகத்தின் புலப்பாடாகவும் பண்பாட்டின் செல்வமாகவும் அழகின் இருப்பிடமாகவும் மனதைக் கவர்வதாகவும் இருக்கும் ஆக்கப் படைப்புகளே கலை எனப்படுகிறது. மனித அறிவு இயற்கையோடு ஒன்றியும் உறழ்ந்தும் நின்றதால் கலை தோன்றியது. காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் விலங்குகளைக் கொல்ல கல்லைக் கூர்மையாக்கி ஆயுதமாக்கினான். இது தான் மனிதனின் முதல் கலைப்படைப்பு.2 இவ்வாறாகவே கலை மனித வாழ்வில் புகத்துவங்கியது.

கண்ணைக் கவரும் நடனத்திற்கும் சிற்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பார்ப்பவர்கள் மனதில் இரஸாநுபவம் தோன்றும் பொருட்டு அபிநயங்கள் எவ்வாறு நடனத்திற்கு இன்றியமையா சாதனங்களாய் இருக்கின்றனவோ அவ்வாறே அவை சிற்பத்திற்கும் இன்றியமையாதனவாகின்றன. பொதுவாக சிற்ப ஓவிய வடிவங்கள் அபிநயச் சிறப்புப் பொருந்தவே அமைக்கப்படுகின்றன. நாட்டியக்கலையினிடமிருந்தே சிற்பக்கலை பல சிறந்த இயல்புகளைப் பெற்றிருக்கின்றது. பரதநாட்டியத்திற்கு உதாரணமாக இன்றும் நாட்டின் கண் இருப்பன ஆலயங்களில் காணப்படும் சிற்ப உருவங்களே ஆகும்.3

**சிற்பக்கலையின் சிறப்பம்சங்கள்**

சிற்பங்களை வடிப்பதில் சிற்பிகள் இயற்கைக் காட்சிகளைப் புறக்கணிப்பதில்லை. அகத்தே தோன்றிய உணர்ச்சிகளைச் சிறப்பாக படைப்பர். சிற்பங்கள் எந்நிலையிலிருந்தாலும் நின்றாலும் அமர்ந்தாலும் கிடந்தாலும் அவை ஆடல் தன்மையைச் சார்ந்தனவாக இருக்கின்றன. தமிழ் சிற்பக்கலையில் தெய்வ வடிவங்களைத் தவிர விலங்குகளின் வடிவங்களையும் இலைகள், பூக்கள், கொடிகள் ஆகியவற்றையும் ஆராய்ந்து நம் சிற்பிகள் அழகுறப் படைத்துள்ளனர். பறவை இனங்களின் வடிவங்களும் சிற்பியின் கரங்களில் தனித்தன்மையோடு மிளிர்கின்றன. தெய்வங்களின் வடிவங்களைக் காட்டும் போது ஆடை அணிகலன்களை உடலோடு ஒட்டியவாறு அமைக்கின்றனர். இறைவியின் முகத்தைத் தீட்டும் போது சிற்பிகள் முகத்தை முழுமதியிலும் கண்களை மலர்களிலும் கூந்தலை மயிற்றோகையிலும் தொடையை யானையின் துதிக்கையிலும் கண்டு ஒப்பற்ற பொலிவுடன் கூடிய சிற்பத்தை அமைக்கின்றனர்.4

**விஜயநகரச் சிற்பங்கள்**

கி.பி.14,15,16ஆம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசர்கள் பல சிற்பச் செழுமை வாய்ந்த மண்டபங்களைத் தோற்றுவித்துள்ளனர். விஜயநகர காலத்திற்கு முன்னர் தமிழகச் சிற்பங்களில் மாதர்களின் மார்பகங்கள் திறந்தே வடிக்கப்பட்டுள்ளன. புடவையால் மூடப்பட்டிருக்காது. இவர்கள் காலத்திலிருந்துதான் புடவையைக் கொண்டு மறைத்த நிலையில் இருக்கின்ற சிற்பங்களைக்

காணமுடிகின்றன. இக்காலச் சிற்பங்களில் சிற்பத்தின் முகத்தில் எவ்வித உணர்வும் வெளிப்படவில்லை. மூக்கு கூர்மையாகவும் முகவாய்க்கட்டை செங்குத்தாகவும் செதுக்கப்பட்டுள்ளன. அடிவயிறானது வட்டமாகவும் சரிந்தும் காணப்படும். அக்கால சிற்பங்களில் 'திரிவலி'5 என்று கூறப்படுகின்ற மூன்று நேர்கோடுகளை அடிவயிற்றிற்கு மேல் காணலாம். இக்காலத்தில் தான் நாமம் என்ற நெற்றச்சின்னங்கள் தோன்றின.

**விஜய நகர நாயக்கர் கால ஆடற்சிற்பம்**

சோழப் பெருமன்னருக்குப் பின் தமிழகத்திலே பிற்காலப் பாண்டியப் பெருமன்னரும், விஜயநகரப் பெருமன்னரும் அவர்களுடைய இராணுவ தேசாதிபதிகளாகிய நாயக்கரும் ஆட்சி செய்து வந்தனர். இக்காலப் பகுதியிலே குறிப்பாக விஜய நகர நாயக்க மன்னர் ஆட்சியின் போது நிலவிய நடன நிலை பற்றி அக்காலச் சிற்பங்கள் எடுத்துரைக்கின்றன. பரத கண்டத்திலே கட்டடக்கலை வரலாற்றிலே தனிச்சிறப்புடன் விளங்குகின்ற மதுரைக் கோயில் சிற்பக்கலை வரலாற்றைப் பொறுத்தவரையிலும் முதன்மைத் தலமாக விளங்குகின்றது. அங்கு போல வேறெங்கும் பெருந்தொகையான சிற்பங்களை காண முடிவதில்லை. சோழர் காலச் சிற்பக்கலையைப் பொறுத்தவரையில் மூலவர் படிமங்களும் விமானத்தின் சுவர்புறங்களில் அமைந்த சிற்பங்களும் அதிக பிரசித்தமானவை. ஆனால் விஜயநகர நாயக்கர் காலத்தைப் பொறுத்தவரையில் கோயில் மண்டபங்கள் எல்லாம் சிற்பக் கலைக் கூடங்களாக விளங்குகின்றன. ஆயிரங்கால் மண்டபம், கல்யாண மண்டபம், திருச்சுற்று மாளிகை முதலான அமைப்புக்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான பிரமாண்டமான தூண்கள் அமைந்திருக்கின்றன.6 அவற்றிலே பல்லாயிரக் கணக்கான சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மதுரைக் கோயிற் கடவுட் படிமங்கள் ஆகமப் பிரகாரமானவை. சிற்ப நூல்களிலே சொல்லப்படுகின்ற பிரதிமாலஷணங்களுக்கு அமைய அவை உருவாக்கப்பட்டுள்ளன. 'திருவிளையாடற் புராணம், ஹாலஸ்ய மகாத்மியம், சிவபுராணங்கள் முதலியவற்றிலே சொல்லப்படுகின்ற கதைகளுக்கு விளக்கமான சிற்பங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.7

மேலும் கோயில்களில் கலைப்பணி புரிந்த தேவதாசிகள் தெய்வங்களுக்கு முன் ஆடி வந்தனர். 'பயஸ் என்பவர் அரசமாளிகையிலிருந்த நடனமாதர் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாளிகையின் உட்பகுதியிலே மன்னருடைய சிலைக்கு முன் ஆடி நின்றனர் எனக் கூறியுள்ளார்.'8 மேலும் அவருடைய கூற்றுப்படி நடன மண்டபம் நீண்டதாகவும், அகலம் குறைந்ததாகவும் இருந்தது. அதனை எல்லாப் பக்கங்களிலும் முலாம் பூசிய அரைத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவ்விரண்டு தூண்களுக்கிடையிலுள்ள வரிசையில் உருவங்கள் இருந்தன. தூண்களுக்கும் சிலைகளுக்கும் இடையிலுள்ள பகுதி இலைத் தொகுதியினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இங்குள்ள உருவங்கள் அனைத்தும் சிறிய மேளங்களைத் தாங்கி நிற்கும் நடனமாதரினைக் காட்டுவன. ஒவ்வொரு வரிசையில் உள்ள உருவங்கள் நடன முடிவிலான நிலைகளைக் காட்டின. இதனால் நடன மாதர் தாம் ஆடும் போது குறிப்பிட்ட நடன நிலையினை மறந்தால் அவ்வரிசையிலுள்ள நடன நிலையினைப் பார்த்து நடன முடிவிற்கான நிலையினை நினைவு கூர்ந்து தொடர்ந்து ஆட முடிந்தது. எனவே அவர்கள் செய்ய வேண்டியவற்றை

மனங்கொள்ளற்பாலராயினர். அவர்கள் நடனமாடுவதற்குத் தமது உடம்பினை வெகு வேகமாகப் பயன்படுத்தி அழகாக ஆடினர் என சிற்பங்களினூடாக நாம் அறியக் கூடியதாக உள்ளது.

அதுமட்டுமல்லாது 'கம்பத்தடி மண்டபத்து மூன்றாவது தூணிலே ஆடல் வல்லானின் உருவம் அமைந்திருக்கின்றது.' வெள்ளியம்பலத்திலும், நாயக்க மண்டபத்திலும், ஆயிரங்கால் மண்டபத்திலும் அளவிலே பெரிய நடராஜர் வடிவங்கள் அமைந்துள்ளன. மீனாட்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவ தினத்திலே வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோர் பொருட்டுச் சிவபெருமான் திருத்தாண்டவம் புரிந்தார் என்பது புராணக்கதை. பொன்னம்பலத்திலே தாண்டவம் பயின்ற நடேசப் பெருமான் அவ் இருவர்களின் பொருட்டு வெள்ளியம்பலத்திலே திருநடனம் செய்தார். இக்கதையை அடிப்படையாகக் கொண்டு திருவாலவாய் வெள்ளியம்பலம் என்று வர்ணிக்கப்பட்டது. பாண்டியர் நடராஜர் சபைக்கு வெள்ளிவிதானம் அமைத்தனர். வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் ஆடுகின்ற கூத்து சற்று வேறுபட்டதாகும். அங்கு இடக்கால் முயலகன் மீது ஊன்றிய கோலத்தில் அமைந்திருக்க வலக்கால் வீசித் தொங்கிய நிலையில் காணப்படும். கம்பத்தடி மண்டபத்து நடராஜரின் கோலம் பொன்னம்பலத்திலே உள்ளதாகும். சிவனுடைய முடி ஜடாமகுடமாகும். முன் இடக்கரம் கஜகஸ்தமாகும். அதன் பின்னுள்ள கரம் அக்கினிச் சுவாலை ஏந்திய கோலமானது முன்வலக்கரம் அபயகஸ்தமாகும். பின் வலக்கரம் டமருஹம் ஏந்தியுள்ளது. வீசித் தொங்கிய இடக்கால் முயலகன் பிடித்துள்ள பாம்பின் தலைமேற் தாங்கியுள்ளது. அருகிலே பார்வதியின் உருவம் அமைந்துள்ளது. நடராசரின் உருவத்தின் கீழ் நான்கு கரங்களுடன் நந்திதேவர் காணப்படுகின்றார். முன்னிரண்டு கைகளும் மத்தளம் கொட்ட பின்னிரு கைகளும் மான், மழு ஏந்திய கோலமாயுள்ளன. நந்திதேவரின் இரு பக்கங்களிலும் வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோர் காணப்படுகின்றனர். அதே தூணின் வேறொரு பக்கத்தில் மகாவிஷ்ணு மேளங்கொட்ட, தும்புரு, நாரதர் ஆகியோர் வீணை வாசிக்கின்றனர். அத்துடன் மிக மெலிந்த தோற்றத்துடன் காளியின் உருவமும் தெரிகின்றது. தூணின் அடுத்த பக்கத்தில் பிரம்மா தாளம் போடும் காட்சி தெரிகின்றது. திருநடனம் காண்பதற்கு வந்த மற்றைய தேவர்களதும், ரிஷிகளதும் உருவங்கள் தெரிகின்றது. விஜயநகர நாயக்கர் கால சிற்பங்கள் நடனம் வளர்த்ததாக இச்சிற்பங்கள் மூலம் அறியலாம்.9

மேலும் விஜயநகர காலத்திலே 'தூண்களிற் சிறிய சிற்பங்களை வடிக்கும் முறை விருத்தியடைந்தது. பெரிய புராணத்திலே வரும் சிறுதொண்டர் கதை, கிராதார்ஜீனியக் கதை முதலானவற்றின் அம்சங்கள் தூண்களிலே சிற்ப வடிவங்களாக அமைக்கப்பட்டன.' சிறுத்தொண்டருக்குச் சிவன் பிள்ளை வரம் அருள்வது, சீராளனின் பிறப்பு, சிவன் அன்னதானம் கேட்டு வருதல், சிவனின் ஆனந்த தாண்டவம் என்பன தூண்களிலே சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத் தூண்களிலே பலவிதமான சிறிய சிற்பங்கள் அமைக்கப்பட்டன. உமாதேவியார், கணபதி, நந்திதேவர் ஆகியோருடன் ஆனந்த தாண்டவம் புரியும் நடராசர், துர்க்கை, திரிபுரம் எரித்த விரிசடை கடவுள், காலகாலன், சாலபாஞ்சிகை முதலியோரின் உருவங்கள் லெபாஷி முதலிய கோயில்களிற் காணப்படுகின்றன.10 அதுமட்டுமல்லாது அவதாரத்தின் பல்வேறு கோலங்கள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தூணிலிருந்து மனித உடலும் சிங்கத்தின் தலையும் பொருந்திய கோலத்தில்

நரசிம்மர் வெளிப்படுவதை திருவானைக் கோயிலிற் காணலாம். விஜய நகர காலத்துச் சிற்பங்களிலே திருமாலின் தசாவதாரக் கோலங்கள் குறிப்பிடத்தக்கவை. சிருங்கேரி, அழகர் கோயில் ஆகிய இடங்களில் பத்து அவதாரங்களையும் விளக்குஞ் சிற்பங்கள் ஒரே வரிசையில் உள்ளன. மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், இராமாவதாரம் ஆகியவற்றின் வடிவமான சிற்பங்கள் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில், மதுரைக் கூடலழகர் கோயில் ஆகியவற்றில் அமைந்திருக்கின்றன. திருவிளையாடற் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலிலும் பெரிய புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் தேவிகாபுரத்திலும் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணத்தில் வர்ணிக்கப்படும் காட்சிகள் மீனாட்சி அம்மன் கோயில் புதுமண்டபத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மச்ச - கூர்ம - வராக கர்வபங்க மூர்த்தி என வர்ணிக்கப்படும் சிற்ப வடிவங்கள் சைவக் கோயில்கள் சிலவற்றிலே காணப்படுகின்றன. சிவன் காளியோடு போட்டியாக ஆடிய நடனம் ஊர்த்துவ தாண்டவம் ஆகும். ஊர்த்துவ தாண்டவத்திலே சிவன் வலக்காலைத் தலையின் மட்டத்திற்கு உயர்த்தி ஆடுகின்ற கோலம் அமைந்திருக்கும் நாட்டியத்திலே காளிக்கு நிகரானவர்கள் இல்லை. காளியும், சிவனும் போட்டியாக ஆடினார்கள். இறுதியிலே காளியை வெற்றி கொள்ளும் வண்ணமாகச் சிவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார். நாணத்தின் காரணமாக காளியினால் அவ்வாறு ஆடிக்கொள்ள முடியவில்லை. ஊர்த்துவ தாண்டவக் கோலச் சிற்பங்கள் புதுமண்டபத்திலும், கம்பத்தடியிலும் உள்ளன. வலது பக்கத்திலுள்ள ஐந்து கைகளில் டமருகம், மழு, அம்பு, ஈட்டி, சூலம் ஆகியன தெரிகின்றன. சிவனுடைய இடக்காலின் கீழ் முயலகனின் உருவம் அமைந்திருக்கின்றது. புதுமண்டபத்திலுள்ள வடிவத்தில் பிரதிமாலசஷணங்கள் சற்று வேறுபட்டனவாகும். கரங்களிலுள்ள படைக்கலங்கள் அதிலே வேறு விதமாக அமைந்துள்ளன. காளியின் உருவம் பஞ்சமுக வாத்தியத்தை இசைக்கும் கோலத்தில் அமைந்திருக்கின்றது. பீடத்திலே நந்தி மேளங்கொட்டும் கோலமும், தாளம் போடும் நிலையில் பிரம்மாவின் வடிவமும், பிரம்மா பதாக என்னும் கருவியை மிழற்றும் கோலமும் செதுக்கப்பட்டுள்ளன. புது மண்டபத்திலுள்ள ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் வடிவம் உன்னதமான வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கலை வனப்பில் மதுரையிலே காணப்படும் சிற்பங்களில் சாலவும் சிறந்தவற்றுள் ஒன்றாக அது கொள்ளப்படுகின்றது. அங்கலஷணங்களும் பாவங்களும் உன்னதமான முறையில் அமைக்கப்பெற்றுள்ளன.11 வடிவம் வசீகரமான தோற்றம் கொண்டது. காலத்துவமும் அனுபவ முதிர்ச்சியும் ஒப்பற்ற வகையில் இவ்வடிவத்திலே பிரதிபலிக்கின்றது. இவ்வாறாக சிற்பங்கள் மூலம் நடனக் கலையானது வளர்க்கப்பட்டது.

**சிற்பங்களில் ஆடற்கூறுகள்**

மனிதன் மிருகங்களைப் போல அலைந்து திரிந்த மிகப் புராதனக் காலத்திற் கூட ஆடற்கலையானது நிலவிற்று எனலாம். இக்கலையானது மரபு ரீதியிலும், தெய்வீக ரீதியிலும், இயற்கை ரீதியிலும் தோற்றம் பெற்று சங்க காலம் தொடக்கம் விஜய நகர நாயக்கர் காலங்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அந்த வகையில் இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்கு பலவிதமான காரணிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆடற்சிற்பமும் ஒன்றாகும். ஆடலை பற்றிய அணைத்து

விடயங்களையும் நாம் சிற்பங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம். ஆடலின் தோற்றம், ஆடை அணிகலன்கள், முத்திரைகள், இரஸங்கள், அங்க அசைவுகள், கரணங்கள், பக்கவாத்தியங்கள் என்பவற்றை நாம் அறியலாம். இவ்வாறான ஆடற் சிற்பங்கள் இராஜராஜேஸ்வரம், கங்கை கொண்ட சோழபுரம் மதுரை மீனாட்சி அம்மன், மாமல்லபுரம், வைகுந்தப் பெருமான், கைலாசநாதர் கோயில், திருச்செங்கோடு, திருப்பரங்குன்றம் போன்ற பல ஆலயங்களில் காணலாம்.*12* ஒவ்வொரு காலங்களிலும் மன்னர்களின் ஆதிக்கத்தால் பலவிதமான கோயில்கள் அமைத்து அங்கு அழியாத வண்ணம் ஆடற்சிற்பங்களைச் செதுக்கினர்.

அந்த வகையில் சங்க காலத்தில் காணப்பட்ட கூத்தினை அறிந்து கொள்வதற்கு ஒரிசாவிலுள்ள ராணிகும்பா, உதயகிரி குகைகளில் காணப்படும் சிற்பங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். மேலும் *108* தாண்டவங்களில் இறைவனின் ஐந்தொழிலையும் உணர்த்தும் தாண்டவங்களும் காணப்படுகின்றன. இவற்றள் ஐந்தொழிலையும் ஒருங்கே காட்டும் தாண்டவம் ஆனந்த தாண்டவம் ஆகும். ஐந்தொழில்கள் பற்றியும் கரணங்களின் அங்க நிலைகள், அவை உணர்த்தும் செய்திகள், என்பவற்றை அறிந்து கொள்ள இராஜராஜேஸ்வரம், சாரங்கபாணி ஆடற் சிற்பங்கள் என்பன சான்றாக அமைகின்றன. பல்வேறு மன்னர்கள் ஆண்ட காலத்தில் வழக்கிலிருந்த இசைக் கருவிகள் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் சிற்பங்களை அமைத்துள்ளனர். நடனமாடுவோர் ஆடுகையில் ஆட்டங்களுக்கேற்ப இசைக்கருவிகளை இசைத்து நடனமாடுவோரின் சிற்பம் தில்லைச் சிவகாமியம்மன் கோயிலில் காணக்கூடியதாய் உள்ளது. இதிலிருந்து பறை, முழவு, முரசு, உடுக்கை, புல்லாங்குழல், யாழ், கைத்தாளம் முதலான இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன என அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாது மரபு வழி ஆடலின் தோற்றத்தின் கதையை நாம் அறிந்து கொள்வதற்கு ஆதாரமாக மாமல்லபுர சிற்பம் காணப்படுகின்றது. அதாவது சிவபிரான் தண்டு முனிவருக்கு ஆடலின் கால் அசைவுகளை புகட்ட, தண்டு முனிவர் பரதருக்கு கற்பிப்பது போன்று சிற்பம் காணப்படுகிறது. ஆடலின் ஒவ்வொரு நுட்பத்தினையும் அறிய வேண்டுமாயின் நாம் சிற்பத்தை உற்று நோக்கினால் அறிந்து கொள்ளலாம்.

அந்நியராட்சியினாலும் பிறகாரணிகளாலும் ஆடற்கலை சீரழிந்து மங்கி மறையும் நிலையில் இருந்தபோது மறுமலர்ச்சிக்கு வழிகோலிய திரு.ஈ.கிருணய்;யர், திருமதி. ருக்மணி தேவி அருண்டேல், வழுவூர் இராமையாப்பிள்ளை முதலியோர் நாட்டிய நூல்களை மட்டுமன்றி ஆடற் சிற்பங்கள் குறிப்பாக கரண சிற்பங்களை நன்கு அவதானித்தே மறைந்து போன ஆடலுக்கு புத்துயிர் கொடுத்தனர் எனலாம். ருக்மணி தேவி அருண்டேல் தனது அரங்கேற்றத்தின்போது அதற்குரிய ஆடை அணிகலன்களை சிற்பங்களை பார்த்தே தெரிந்து கொண்டார். இவ்வாறு ஆடற் சிற்பங்கள் மிகவும் பேருதவியாக இருக்கிறன.

**முடிவுரை**

மனித வரலாற்றிலே கலைகள் ஒரு முக்கியமான இடத்தை வகித்து வந்துள்ளன. அவை மக்களை வழிப்படுத்தியும், செம்மைப்படுத்தியும் வளர்ந்துள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆதிகாலம் தொட்டு தமிழர் வாழ்விலே வாழ்வியலோடு ஒன்றிணைந்து இக்கலைகள் வளர்க்கப்பட்டன. இக்

கலைகளிலே ஆடற்கலையும் ஒன்றாகும். ஆண்களோ, பெண்களோ கவர்ச்சிகரமாக ஆடி மக்களை மகிழ்வித்த ஆடற்கலைக்கு சிற்பிகள் கலைத்திறனையும், கற்பனை திறனையும் பயன்படுத்தி சிற்பங்களாக அழியாத நிலையளித்துள்ளனர். நடனமாடும் நடனக்கலைஞர் போலன்றி அசைவற்ற, அழியாத நிலையிலுள்ள நடன சிற்பங்கள் தோன்ற வழிகோலப்பட்டது. நடனமாடும் நடனக்கலைஞர் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் அக் கலையின் பல்வேறு கோலங்கள் இன்றும் எமக்குக் கிடைக்கும் பாங்கில் இவ் ஆடற் சிற்பங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் விஜயநகர நாயக்கர் காலஆடற் செய்திகளை இன்றும் நாம் அழியாத நிலையிலுள்ள சிற்பங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். ஆடலின் புனிதத் தன்மையை இன்றுவரையும் பாதுகாக்கப்படுவதை சிற்பங்கள் வாயிலாக அறியலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

1.லீலாம்பிகை செல்வராஜா, நடனசாரம், யூனிஆட்ஸ் பிறைவட் லிமிடெட், கொழும்பு *13, 2011,* பக்கம் *– 10*

2.மேலது பக்கம் - *12*

3.பத்மநாதன்.சி., இந்துக் கலாச்சாரக் கோயில்களும் சிற்பங்களும் யுனிஆட்ஸ் பிறைவட் லிமிடெட் கொழும்பு *13,2001,* பக்கம் - *89*

4.கற்பகம், அறுபத்துநான்குகலைகள், கலைஅறிவியல் கல்லூரி, *2005*, பக் - *64*

5.ஸ்ரீநிவாசன்.பி.ஆர்,தென்னிந்தியக் கோயில், தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை, *2000*, பக்கம் - *78*

6.பத்மநாதன் .சி., இந்துக் கலாச்சாரக் கோயில்களும் சிற்பங்களும் யுனிஆட்ஸ் பிறைவட் லிமிடெட் கொழும்பு *– 13, 2001,* பக்கம் *- 43*

7.சிவச்சாமி.வி,பரதக்கலை, கொழும்பு,*2011*, பக்கம் - *149*

8.பத்மநாதன் .சி., இந்துக் கலாச்சாரக் கோயில்களும் சிற்பங்களும் யுனிஆட்ஸ் பிறைவட் லிமிடெட் கொழும்பு *– 13, 2001,* பக்கம் - *373*

9. சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்,சென்னை,*2003,*பக் - *192*

10. பாலுசாமி.சா, நாயக்கர்கால கலைக்கோட்பாடுகள், சென்னை*, 2013*, பக் *215*

11. சீனி வேங்கடசாமி, மகாவலிபுரத்து வைனசிற்பம், சென்னை*, 1974*, பக் *174*

12. நவரத்தினம்.க, தென்னிந்திய சிற்ப வடிவங்கள், கொழும்பு, *2006*, பக்கம் - *98*